மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நோக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான நிதிக்கு வழிவகை செய்ய முயற்சிக்கிறோம்.

மாவட்ட நூலக ஆணைக்குழு.

*2166. திரு. என். பெரியசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிதம்பரனார் மாவட்டத்தின் தலைநகரான தூத்துக்குடியில் மாவட்ட நூலக ஆணைக்குழு அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவை பாரதியார் பல்கலைக் கழகம்.

*6165. திரு. கே. ரமணி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகம் நிறுவ நிலம் கையகப்படுத்தியதால் நிலமிழந்த விவசாயக் குடும்பங்களுக்கு குடும்பத்தில் ஒருவருக்கு பல்கலைக் கழகத்தில் வேலை தருவதாக அரசு வாக்குறுதி கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு சார்பு நிறுவனங்களுக்காக நிலம் கையகப்படுத்தியதால் நிலம் இழந்த விவசாயக் குடும்பங்களுக்கு குடும்பத்தில் ஒருவருக்கு அந்நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்க தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை எண் 656, நாள் 29–6–1978 இல் ஆணை இடப்பட்டுள்ளது.

1990 ஏப்ரல் 19]

(ஆ) மேற்குறித்த அரசாணையின்படி பாரதியார் பல்கலைக் கழகத்திற்காக நிலம் கையகப்படுத்தியதால் நிலம் இழந்த விவசாயக் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்ட வேலை வாய்ப்பின் விவரங்கள் வருமாறு.—

		எண்ணிக்கை.
(1)	இளநிலை உதவியாளர் ..	10
(2)	தட்டச்சர்	1
(3)	பதிவறை எழுத்தர்	9
(4)	அலுவலக உதவியாளர் ..	23
(5)	ஓட்டுநர்	1
(6)	கிளீனர்	2
(7)	மின்சார உதவியாளர் ..	1
(8)	தோட்டப் பணியாளர் ..	7
(9)	துப்புரவாளர்	3

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, பாரதியார் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு, அந்தப் பகுதியிலே நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தியதன் மூலமாக, ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் கட்டாயமாக வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்பதை, அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒரு சில பேருக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. இன்னும் பல விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல், தங்களுடைய குடும்பங்களிலே இருக்கின்ற குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு கேட்டு, அந்த பாரதியார் யூனிவர்சிடிக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கட்டாயமாக நிலம் இழந்த விவசாயக் குடும்பங்களுக்கு ஏற்கெனவே ஒப்புக்கொண்ட அடிப்படையில், குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற முறையில், ஏதாவது தகுதியின் அடிப்படையில், வேலைவாய்ப்பு கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கேள்வியின் நோக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. நோக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர, பல்கலைக்கழகத்திலேயுள்ள வேலைகளில், அவர்களுக்கு வழங்கக்கூடிய வேலைகள் தான் வழங்கப்படுகின்றன; வழங்கக்கூடிய வேலைகள் என்றால், அவர்கள் கல்வி அடிப்படையில் வைத்து, எந்த அளவுக்கு வழங்க முடியுமோ, அந்த அளவுக்கு வழங்கப்படுகிறது. அவர்களுக்கு

முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. அது, அவ்வப்போது, பல்கலைக் கழகத் துணை வேந்தரால், கவனிக்கப்படுகிறது.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகள் அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என் பது அந்தப் பல்கலைக் கழகத்திலே ஒரு எண்ணமாக இருந்தாலும் கூட, அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, அங்கே இருக் கின்ற வேலைவாய்ப்புக்களை ஒட்டி அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதால், மிகக் குறைவாகத்தான் அங்கே வேலை வாய்ப்பு கிடைக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் வேலை கிடைக்குமா என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லோருக் கும் அந்தப் பல்கலைக் கழகத்திலே வேலையில்லை என்றும் தெரிய வருகிறது. எனவே, வேறு அரசாங்க நிறுவனங்களிலா வது வேலைவாய்ப்பு வருகின்றபோது, அவர்களுக்கு முன்னுரிமை தந்து, அந்தக் குடும்பங்களை கவனிப்பதற்கு அரசு ஆவன செய் யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நிலம் வழங்கியவர்கள் 337 பேர். அந்த 337 பேரில், 57 பேருக்கு வேலை வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கும் வேலை வழங்க முன்னுரிமை தருவதற்கு, பல் கலைக் கழகம் ஒப்புக்கொண்டிருக்கிறது. மற்ற அரசு நிறுவனங் களிலே வழங்க வேண்டுமானால், அதை ஒரு கொள்கை அடிப் படையிலே பரிசீலிக்க வேண்டும். பரிசீலித்து ஏற்றுக்கொண்டால் தான், அதை நடைமுறைப்படுத்த முடியும்.

முன்சீப் கோர்ட் அமைத்தல்

*6298. **திரு. பி. மாரப்பன் :**

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெருந்துறை தாலுக்கா, பெருந்துறை நகரில் முன்சீப் கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது நிறைவுபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டம் பெருந்துறையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றை அமைக்க உயர்நீதி மன்றம் பரிந்துரை செய்துள்ளது. இச் செயற்குறிப்பை